உ
சிவமயம்
கணபதி துணை

வேலணை மேற்கு பெரியபுலம்

# மஹா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயம்



## முடிப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ்

11.12.2010

உ

சிவமயம்

கணபதி துணை



வேலணை மேற்கு பெரியபுலம்

# மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயம்

# முடிப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ்


பாடியவர்:

பண்டிதை திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை



நூலின் பெயர் : வேலணை மேற்கூர் முடிப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ்

நூலாசிரியர் : திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை

பதிப்பு : மார்கழி (கார்த்திகைத்திங்கள் 25ம் நாள்) (11.12.2010)

பதிப்புரிமை : திரு. பழனிநாதன் ஆரூரன் வேலணை மேற்கு.

பக்கம் : XIV+ 52


அச்சகம் : கஜன் பிறிண்டேர்ஸ் கோண்டாவில்.



# பொருளடக்கம்


- ஆசியுரை - சிவஸ்ரீ ம. பிரபாகரக்குருக்கள்
- ஆசியுரை - விகடகவி மு. திருநாவுக்கரசு
- வாழ்த்துச்செய்தி - திரு. பொன்னம்பலம் அருணகிரிநாதன்
- அறிமுகவுரை - திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை
- வெளியீட்டுரை - திருமதி வேணுகா சண்முகரெத்தினம்
- முன்னுரை - திருமதி வை. கணேசபிள்ளை
- நன்றியுரை - பழனிநாதன் ஆரூரன்

| | |
|---|---|
| 1) பிள்ளைத்தமிழ் | 1 |
| 2) காப்பு | 2 |
| 3) காப்புப் பருவம் | 3 |
| 4) பார்வதி காப்பு | 4 |
| 5) நாரணன் காப்பு | 5 |
| 6) முருகன் காப்பு | 6 |
| 7) நாமகளும் பூமகளும் | 7 |
| 8) செங்கீரைப் பருவம் | 8 |
| 9) தாலப்பருவம் | 13 |
| 10) சப்பாணி | 18 |
| 11) முத்தப்பருவம் | 23 |
| 12) வருகைப்பருவம் | 28 |
| 13) அம்புலிப்பருவம் | 33 |
| 14) சிற்றில் பருவம் | 38 |
| 15) சிறுபறைப்பருவம் | 43 |
| 16) சிறு தேர்ப்பருவம் | 48 |



மூலமூர்த்தி



எழுந்தருளி

# ஆசிச் செய்தி

வேலணை மேற்கு பெரிய மகா கணதிப்பிள்ளையார் பேரில் பாடிய ***"பிள்ளைத்தமிழ்"*** பாடல்கள் இன்று நூல் வடிவில் வெளிவருவது எம்பெருமானின் திருவருளே. மிகத் தொன்மையான வரலாற்றைக் கொண்ட எம்பெருமான் மீது பாடப்பட்ட இப்பாடல்கள் எமது ஆலயத்தைப் பொறுத்தவரையில் புதிய ஒரு அத்தியாயமாகும்.

***"பிள்ளைத்தமிழ்"*** பாடல்களை இயற்றி நூல் வடிவில் உருவாக்கி இன்று வெளியிட உதவிய இணுவையம்பதி பண்டிதர் வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களின் இப்பாரிய முயற்சி பாராட்டிற்குரியது. இந்நூல் சிறப்பாக வெளிவர உதவிய இவருக்கும், இவரோடு இணைந்து இம்முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் எமது நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பணியில் உழைத்த அனைவருக்கும் மகா கணபதிப் பிள்ளையாரின் பேரருள் என்றும் கிடைக்க வேண்டும் என எம்பெருமான் பாதார விந்தங்களை பணிகிறேன்.

**சிவஸ்ரீ ம. பிரபாகரக்குருக்கள்**
(ஆலய பிரதம குருக்கள்)
பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் கோயில்)
வேலணை மேற்கு.

# ஆசியுரை

சீர் பூத்து சிறந்து மிக ஓங்கி

செழிப்புற்று விளங்குமந்த

ஊர் போற்ற உலகேற்றும்

உவமையிலா முடிப்பிள்ளையாரை

பேர்பூத்து பெரும்சமய அறிவுபூத்து

பெரும்தொண்டு சுபத்திற்காக நல்கும்

ஏர்பூத்து எழில்பூத்து இலங்குகின்ற

இணுவைநகர் வைகுந்தம் கணேசபிள்ளை

பார்புகழ ஆக்கிய பிள்ளைத்தமிழ்

பயன் பூத்து பார்மிசை விளங்குமாமே!

**விகடகவி மு. திருநாவுக்கரசு**
(ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி)



# வாழ்த்துச் செய்தி

வேலணை மேற்கு பெரிய புலத்தில் எழுந்தருளியிருந்து வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கும் மகா கணதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) பேரில் பல்வேறு காலங்களில் பல்வேறு அறிஞர்களால் பல்வேறு பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவற்றை ஆலய கும்பாபிஷேக மலரில் காணக்கூடிய தாக உள்ளது. எம்பெருமானின் திருவருளை வியந்து பாடிய பாடல்களை நாம் கண்டுள்ளோம்.

இந்த வரிசையில் இணுவையம்பதி பண்டிதர் வைகுந்தம் கணேசபிள்ளை அவர்கள் எமது பிள்ளையார் பேரில் பாடிய "பிள்ளைத் தமிழ்" பாடல்கள் இன்று நூல் உருவில் வெளிவருவதும், அந்த நூலின் வெளியீட்டு விழா எமது ஆலயத்தில் இன்று நிகழ்வதும் மகிழ்ச்சிக்குரியது. வேலணைப் பதியும், இணுவையம்பதி யும் ஆன்மீக விடயங்களில் மிக ஆழமான பண்பாட்டு விழுமியங்களைத் தொடர்ந்தும் பேணிவரும் கிராமங்களாகும். அந்த வகையில் ஒரு புதிய ஆன்மீக தொடர்பினை இந்த "பிள்ளைத்தமிழ்" நூல் ஏற்படுத்தியுள்ளது.

இம்முயற்சியில் ஈடுபட்ட நூலாசிரியருக்கும் இப்பணியில் ஈடுபட்ட சான்றோரையும் நன்றியுணர்வுடன் வாழ்த்திக் கொள்கிறேன். இம்முயற்சி வெற்றிபெற எல்லாம்வல்ல முடிப்பிள்ளையாரின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்தி வணங்குகிறேன்.

**திரு. பொன்னம்பலம் அருணகிரிநாதன்**
தலைவர்
பரிபாலன சபை
பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் கோயில்
வேலணை மேற்கு.

# அறிமுகவுரை

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் மேற்பால் அமைந்திருப்பன சப்த தீவுகள். இவற்றுள் முதன்மையாக முற்படவிளங்குவதை லைடன் தீவென முன்னர் அழைத்தனர். இதன் நடுநாயகமாகத் திகழ்வது வேலணைப் பதியாகும்.

வேலணைப்பதி இருபிரிவாக கிழக்கு மேற்கு என எட்டு வட்டாரங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. இதில் வேலணை மேற்கு ஆறாம், ஏழாம், எட்டாம் வட்டாரங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

வேலணை மேற்கின் எட்டாம் வட்டாரத்தில் பெரியபுலம் என்னும் பதியிலே சுமார் முந்நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயமாக மிளிர்வதே முடிப்பிள்ளையார் கோவில் என்ற நாமத்தால் அழைக்கப்பெறும் ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் ஆலயமாகும்.

ஆரம்பத்திலேயே கருங்கற்றிருப்பணியாக கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்தம்ப மண்டபம் ஆகியனவற்றை நிர்மாணித்து 1948ம் ஆண்டிலே முதல் மகாகும்பாபிடேகம் செய்யப் பெற்ற சரித்திரப் பிரசித்திபெற்றது இவ்வாலயம்.

அன்று தொடக்கம் காலத்துக்குக் காலம் திருப்பணிகளும் மகோற்சவங்களும் இடையூறின்றி நடைபெற்று வருகின்றமை விநாயகப் பெருமானின் திருவருளே.

கடந்த காலங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்ட இடப் பெயர்வின்போது தீவகமக்களும் குறிப்பாகப் பெருந்தொகையினர் இடம்பெயர்ந்த காலத்திலும் நாளாந்தம் நடைபெறும் பூசை முட்டின்றி இவ்வாலயத்தில் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சைவமுந் தமிழும் செழித்தோங்கும் வேலணைப் பதியில் அருளாட்சி செய்தருளும் முடிப்பிள்ளையார் மீது ஆரா அன்பினால் பாமாலை சூட்டிப் பாடிப்பரவி வழிபாடாற்றிய சான்றோர் பலராவார்.

முதன்முதலில் மகாகணதிப்பிள்ளையார் 'திருவூஞ்சல்' பாடிப் போற்றியவர் வேலணை மேற்கு சைவப்பிரகாச வித்தியா சாலை ஸ்தாபகர் சிவபூசா துரந்தரர் ஸ்ரீமான் வி. கந்தப்பிள்ளை ஆசிரியராவர்.

இதன்பின் முடிப்பிள்ளையார் மீது பக்தியினால் பதிகங்கள் பாடிப் பரவியவர்களுள் சரவணையூர் ஆ. தில்லைநாதப்புலவர்,

குமுளமுனை ஸ்ரீமத் க. சரவணமுத்துப் புலவர், ஆவரங்கால் பண்டிதர் ச. சுப்பிரமணியம் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பெரியபுலம் ஐங்கரனைப் போற்றிப் பாடவேண்டும். அதுவும் அப்பெருமான்மீது **'பிள்ளைத்தமிழ்'** பிரபந்தம் ஒன்று பாடப்பெற்று காலவெள்ளத்தால் அடிபடாது நின்றுநிலவ ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற நம்மூர் அன்பர் ஒருவரின் வேண்டுதலின் பயனாக இப்போது நற்குஞ்சரக்கன்றின் மீது **'முடிப்பிள்ளையார் பிள்ளைத் தமிழ்'** என்னும் நூலினை இணுவையூர் வாசி பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை அவர்கள் தமது அன்பின் வெளிப்பாடாகச் செந்தமிழும் இலக்கிய நயங்களும் ஒருசேர அருமையாகப் பாடிப் பரவியுள்ளார்.

நூலாசிரியர் அவர்கள்தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கசடறக்கற்றுப் பண்டிதர் பட்டம்பெற்று பல ஆண்டுகளாக இராம நாதன் கல்லூரியில் உயர் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ்மொழி இலக்கியங் கற்பித்த அனுபவம் வாய்ந்த நல்லாசிரியர் ஆவார். அவரின் நுண்மாண் நுழைபுல அறிவினை இந்நூலினை ஆழ்ந்து ஆராய்ந்து கற்போர் கண்டின்புறுவர்.

சைவத்தமிழ் மரபிலே பிரபந்தங்களுள் ஒன்றாகிய பிள்ளைத் தமிழ் சிவபெருமானைத் தவிர்த்து ஏனைய மூர்த்திகளாகிய அம்பிகை, விநாயகர், முருகன் ஆகியோர் மீது பாடப்பட்டிருப்பதைக் கற்றோர் கற்றுணர்ந்து களிபேருவகை பெற்றிருப்பர்.

வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ் ஆகிய இந்நூலினையும் கற்றோரும் மற்றோரும் பெற்றுப் பாடிப்பொரு ளுணர்ந்து மனம்மகிழ்வதோடு விநாயகப்பெருமானுடைய திவ்விய அருள்பிரவாகத்தையும் பெற்றுய்வார்கள் என்பதற்கோர் ஐயமில்லை.

இந்நூலை ஆக்கித் தந்த நூலாசிரியைக்கும், இந்நூல் வெளிவர உதவிய அன்பு உள்ளங்களுக்கும் பெரியபுலம் முடிப் பிள்ளையின் திருவருள் என்றும் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டு மெனப் பிரார்த்திக்கின்றோம்.

> "எப்போதகத்தும் நினைவார்க்கிடரில்லை
> கைப்போதகத்தின் கழல்"

**சைவப்புலவர் சித்தாந்தபண்டிதன்**
**மு. திருஞானசம்பந்தபிள்ளை**
ஓய்வுநிலை அதிபர்

# வெளியீட்டுரை

ஈழத்திரு நாட்டின் வடபால் அமைந்துள்ள சப்ததீவுகளில் ஒன்றான வேலணையின் மேற்கூர் வாசிகள் சைவப்பண்பாட்டு விழுமியங்களை நாளும் போற்றி வாழ்ந்து, அமுது உட்கொள்ள முன்னர் சிவபூசை செய்து உண்ணும் பாரம்பரியத்தைக் கொண்ட வர்கள். இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்த சான் றோர்கள் வசிக்கும் வேலணைப்பதியில் உதித்த வள்ளலும், தற்போது இலண்டனில் வசிப்பவருமான அடியவர் ஒருவரின் நீண்ட நாள் விருப்பத்தின் காரணமாக, அவரின் நெருங்கிய உறவினரும் எனது மாமனாருமான அமரர் மாணிக்கம் இலிங்கப்பிள்ளை குடும்பத்தவர் வேலணை முடிப்பிள்ளையாருக்கு ஒரு பிள்ளைத்தமிழ் பாடவேண்டும் என்றும், அதற்கு உங்கள் ஆசிரியர்கள் மூலம் பாடித்தர முடியுமா என்றும் கேட்டனர். அதற்கிணங்க எனது பாடசாலை ஆசிரியர் திருமதி சிவசக்தி சோமநாதனை அணுகிக் கேட்டபோது, அவர் மனமார ஏற்று பாடித்தரலாம் எனக்கூறி இருந்தாலும் என்னைவிடச் சிறப்பாக பாடித்தரக்கூடிய ஒருவர் திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை எமது இணுவில் பதியில் இருப்பதாகக் கூறியதோடு, அவர் மூலம் இப்பிள்ளைத்தமிழை பாட ஏற்பாடுகளும் செய்து தந்தார்.

இப்பாடலைப் பாடி முடித்த காலத்தில் என்னை நூலாசிரியர் சந்திக்க விரும்புவதாகக் கூறியதையடுத்து கடந்த காலத்தில் முதன் முறையாக எமது சந்திப்பு (11.09.2010)இல் இடம்பெற்றது. அவ் வேளையில், அவரும், அவரது துணைவரும் எம்மை அன்போடு வரவேற்று உபசரித்ததுடன் நான் பிள்ளைத்தமிழைப் பாடி வைத் திருக்கின்றேன். அப்படியே தந்தால் எழுத்துக்கள் தெளிவாக இராது

எனக்கூறி இதனை கணனி மயப்படுத்தி செம்மையாகத் தருவதாகக் கூறினார்.

இப்பிள்ளைத்தமிழை பிள்ளையார் சந்நிதியில் வைத்து வெளியீடு செய்தபின்னரே நீங்கள் வேறு அன்பர்களுக்குக் கொடுக்க முடியும் எனவும் ஆணித்தரமாகக் கூறியதன் விளைவாக, இன்று இப்பிள்ளைத்தமிழ் புதுப்பொலிவு பெற்று அனைத்து அடியார்களின் கைகளில் தவழும் கைங்கரியத்தைப் பெற்றுள்ளது.

இவை யாவும் சொற்ப காலங்களில் சிறப்புற நிறைவேறியமை பிள்ளையாரின் புதுமையென்றே எண்ணிப் பணிந்து வணங்கி வாழ்த்துகின்றேன். நூலாசிரியர் ஒரு தமிழ்ப் பண்டிதை ஆசிரியர். இவர் வேலணையூரின் இயற்கை வனப்புகளையும், மக்கள் வாழ்வியலையும் அகக்கண்களால் கண்டுகளித்து, எளிமையாகவும், இலகு மொழிநடையிலும், மிகக்குறுகிய காலத்தில் பிள்ளையாரின் குழந்தைப்பருவம் பத்தினையும் பிள்ளைத்தமிழாகப் பாடி, பிள்ளையாரின் அருட்திறங்களை வெளிப்படுத்தியமையையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைவதோடு அவரின் அரும் பணியை மெச்சி அடியார்கள் அனைவர் சார்பிலும் மனதார பாராட்டுவதில் பேருவகை அடைகின்றேன்.

அனைவரும் இதனைப்பாடி பிள்ளையார் கடாச்சத்தைப் பெற்று உய்யவும், பண்டிதர் குடும்பத்தினர் வாழ்வு மலரவும், மேலும் பல ஆக்கங்களை அவர் பிரசுரிக்க வாழ்த்தி முடிப்பிள்ளையார் அருளை வேண்டி இறைஞ்சுகின்றேன்.

(அதிபர்) **திருமதி வேணுகா சண்முகரெத்தினம்**
யா/ மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
மானிப்பாய்.

*11.12.2010*

# முன்னுரை

இணுவைச் ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் எனது குலதெய்வம். பிள்ளையார் மீது பிள்ளைத்தமிழ் ஒன்று பாடவேண்டு மென்ற நினைப்பு என்னுள்ளத்தில் நீண்ட நாட்களாக இருந்து வந்தது. அந்த நினைவு கைகூடும் நாள் வந்தது போலும். இறைவன் ஒருவரே, எங்கும் இருக்கின்றார். வேலணையில் இருப்பவரும் இணுவிலில் இருப்பவரும் ஒருவரே.

இற்றைக்குச் சிலநாட்களுக்கு முன் திருமதி சிவசக்தி சோமநாதன் ஆசிரியை என்னிடம் வந்தார். எமது கல்லூரி அதிபர் வேலணை முடிப்பிள்ளையார் மீது ஒரு பிள்ளைத் தமிழ் பாடித் தரும்படி வேண்டுகின்றார், அதனால் உங்களிடம் வந்தேன், நீங்களே பாடித்தாருங்கள் என்றார். யாவும் இறைவன் திருவருள். எனது உள்ளக்கிடக்கைக்கு இறைவன் அனுமதி தந்துவிட்டார் என்ற நினைப்போடு சம்மதித்தேன். வேலணை முடிப்பிள்ளையாரை மனதி லிருத்தி பருவத்திற்கு ஐந்து பாடல்களாக ஐம்பது பாடல்களை எழுதினேன்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் என்னைச் சந்தித்தபோது இந்நூல் வேலணைப் பிள்ளையார் சந்நிதியில் வைத்து வெளியிடப் படவேண்டும் என்று கூறினேன். அந்தவகையில் இந்நூலை கோண் டாவில் கஜன் அச்சகத்தினர் சிறப்புற அச்சிட்டுத் தந்தனர். அவர் களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கோயி லும் குளமும் கடலுடன் சூழ்ந்த அற்புதக் கணபதியாம் முடிப் பிள்ளையாரை என்மனக் கண்ணில் கண்டு வணங்குகின்றேன். மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரியவரான வேலணை மேற்கூர் பெரியபுலம் மஹாகணபதிப்பிள்ளையார் அருள் எல்லோருக்கும் கிடைக்க எம்பெருமான் முடிப்பிள்ளையைத் தொழுது வேண்டு கின்றேன்.

"அத்தி முகவனை நித்தம் நினைப்பவர்
சித்தமகிழ்வொடு முத்தி பெறுவரே"

வணக்கம்.

**பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளை**
- ஆசிரியர்
இணுவில் தெற்கு.

*11.12.2010.*

# பிள்ளைத் தமிழ்

பிள்ளைத்தமிழ் பிரபந்த இலக்கியங்களுள் ஒன்று. பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாகக் கொண்டு பத்துப் பருவங்களில் வைத்து பாடுதல் பிள்ளைத்தமிழ் எனப்படும். புலவன் பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாகப் பாவனை செய்து பாடும்பொழுது குழந்தைக்குரிய குணாதிசயங்கள், செயல்கள் சுட்டிக்காட்டப்படும். இரண்டு மாத காலம் முதல் நான்காமாண்டு காலப்பகுதி வரை குழந்தையின் செயற்பாடு களைப் பத்துப் பருவங்களில் வைத்துப் பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் அமைக்கப்படுகின்றன. பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரண்டு வகைப்படும். காப்பு, செங்கீரை, தாலாட்டு, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனப் பத்துப்பருவமும் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரியதாகும். இதில் சிற்றில், சிறுபறை, சிறுதேர்ப்பருவம் நீக்கிப், பதிலாக அம்மானை, கழங்கு, ஊசல் என்பன சேர்த்துப் பாடுவது பெண்பாற்பிள்ளைத் தமிழ் எனப்படும்.



# காப்பு ①

(1) வளர்சிறப்பக் கலை மேவும் வானுயர்ந்த
கோபுரங்கள் நாலுங் கொண்டோய்!
தளர்வறியாப் பக்தன் பரராசசேகர மன்னன்
வழிபட்டுய்ந்த இணுவைப் பரராச சேகரனே!
வளர்சிமயப் பொருப்பிலுறை பார்வதிசிவனாரின்
மைந்தன் வேலணை முடிப் பிள்ளையாரின்
வளர் பிள்ளைப் பருவம் பத்தும் பாடிவணங்க
நின்பொற்பாத கமலங்களே காப்பு.

(2) விண்ணோங்கு புகழுடையாய் வேலணைப் பதிஉறையும்
மூத்த முடிப்பிள்ளையே! முழுஞானப்பெருக்கே!
மண்ணோங்கி வாழ்த்தக் குழந்தையாய் நீயிருந்து
செங்கீரை யாடி, தாலாட்டச் சப்பாணிகொட்டி
புண்ணியக் கொழுந்தாய் வருகைதந்து முத்தமிட்டு
அம்புலியோடாடிச் சிற்றில்சிதைத்து சிறுதேருருட்டி
கிண்கிணி ஒலிப்ப சிறுபறை கொட்டும் காட்சி
மனக்கண்ணில் கண்டு தமிழ்செய்ய நின்பதமே காப்பு.





# காப்புப் பருவம் - I

**(சிவனும் உமையும்)**

**இப் பருவம் குழந்தையின் 2ஆம் மாதத்தோடு தொடர்புடையது. குழந்தையைக் காக்கும் படி கடவுளை நற்றாயும் வளர்ப்புத்தாயும் வேண்டுவதாக அமையும்.**

*(1) பெருச்சாளி வாகனமும் அங்குச பாசமும்*
*பெருவயிறும் ஆனைமுகமும் தொங்கும்*
*ஒருகையில் மோதகமும் கொண்ட பிள்ளையை*
*ஏகதந்தனை மேருவில்மறை எழுதிய*
*குருவை வேலணைப்பதி மேவு முடிப்பிள்ளையின்*
*பருவம்பத்தும் தீங்கின்றி வளரத்*
*திரிபுரம் எரித்தசிவனும் ஆதி சக்தி உமையும்*
*உவந்து வந்து காப்பதாமே.*
*அருள் பொழியும் முக்கண்ணனை ஐந்துகரத்தனை*
*ஓங்க ார ரூபனை விக்னவிநாயகனைப்*
*பெரியபுலம் மேற்கூர் மகாகணபதி முடிப்பிள்ளையை*
*சிவனும் உமையும் காக்க காக்கவே.*





# பார்வதி காப்பு ②

தீதிலாத் திருவருள் புரிந்திடச் சிவனும் உமையும்
களிறும் பிடியுமெனக் கலந்தபோதினில்
பூதலம் புரக்கும் பொற்கரி முகத்துடன்
வாரண மதலையாய் வந்துதித்தனன்
பூரண ஞானம் உடையவன் கருணைமிக்கவன்
தனக்கு மேலொரு தலைவனிலாதவன்
வாரண முகத்தவன் வள்ளல் வருமிடர்தீர்க்கும்
விக்னவிநாயகன் மூஷிகவாகனனிவனை
அகிலாண்டமும் ஈன்ற அன்னையே பார்வதித்தாயே
ஐந்துகரத்து வாரணமுகத்து மதலையை
கைலையாளும் ஈசனுவப்ப உவந்து வந்து
கணங்களீசனைக் காக்க காக்கவே.





# நாரணன் காப்பு ③

நீலங்கொள் மேகத்தின் உருவினன் உந்திக்
கமலத்தில் பிரமனைக் கொண்டவன்
ஞாலங்கள் வாழ நலமுடன் காப்பவன்
ஞானச் சுடர்காலும் நேமியான்
பாஞ்ச சன்னியம் ஏந்தும் பரிசுடையான்
பாம்பணையில் துயில் கொள்ளும்
பரந்தாமன் குருட்டுப்பாம்புரு நீங்கப்பேர்
அருள் செய்த கணபதிநாதனை
சிரந்தாழ்த்தி வாழ்த்திக் காக்கவே
வாகனன் கருடனும் கனிந்துகாக்கவே
வாரண முகத்தவனை வணங்கிப் பாற்கடலில்
இனிது பள்ளிகொள்ளும் பரந்தாமனே!
நாரணனே! நான் முகத்தவனோடு சேர்ந்து
நற்றமிழ் ஞானம் நல்கும்
ஏரம்பனை எள்ளிவிடாது ஏடவிழ் மணங்கமழ்
மலர்தூவி ஏந்திக் காக்க காக்கவே!





# முருகன் காப்பு ④

குறமகள் தன்னை வேண்டிப் புனத்திடைச்
சென்றபோது உன் காதல்கண்டு
மறக்குறவர் வாழ்வினின்றும் வள்ளியை
எடுக்க வேண்டி அண்ணன்
முறக்காது கொண்டு வீசி வனத்திடை
நின்றபோது பயந்து துள்ளியே
பறந்தனள் வள்ளி பரிதவித்து அஞ்சி
முருகனைத் தஞ்சம் என்றாள்
சிறந்ததோர் உபாயங் காட்டி நின்று
தம்பிக்கு அருள் செய்த அண்ணனை
மறந்தும் தள்ளிவிடாது கந்தனே! முருகா!
வேல் கொண்டு காக்க காக்கவே!
அறந்தவறி அருவினையால் அவதிகொண்டு
உலைபவர்க்கு வினை நீக்கும் விநாயகன்
சிறந்த துணையாவான் அவனை வள்ளிதெய்வ
யானையுடன் விரைந்து காக்க! காக்கவே!






## நாமகளும் பூமகளும் - ⑤

முண்ட கமலரெனச் சிவந்த மேனியன்
 பொற்கரி முகத்தவன் பெரிய
குண்ட வண்டியன் தண்டரளமாலையன்
 சப்பைக் காலன் சஞ்சலம் தீர்ப்பவன்
தண்டையும் சிலம்பும் அலம்பு தாளிணையன்
 உந்திச் சுழிமேல் உதரபந்தனத் தனத்தன்
இமையா முக்கண்ணன் இருதுளை செவியன்
 அகத்தியர் கமண்டலம் கவிழ்த்தவன்
உமையாள் ஈன்ற ஓங்கார வடிவினன்
 பூதகண நாதன் இமையவர்க்கரசன்
அனலாசுரன் ஆணவம டங்கத் தன்வயிற்றில்
 அடக்கிய ஐங்கர நாதனைத்
தினமும் அடியவர் அறுகு கொண்டு
 அர்ச்சிக்க அகங்குளிர்ந் தருள்பவன்
தன்னை பூமகளும் நாமகளும் புகழ்ந்து
 நாளும் காக்க காக்கவே!





# செங்கீரைப் பருவம் - 2

இப்பருவம் ஐந்தாம் மாதத்தில் நிகழ்வது குழந்தை தவழுதல், குழந்தை கைகளை நிலத் திலூன்றி ஒரு கால்மடக்கி தலை நிமிர்த்தி அசைந்து ஆடுதல்.

(1) பொங்கு கடல்த்திரை எழுந்தார்ப்பரித்து
முழுங்கிக் கரை தட்டி எழ
மீனினம் துள்ளிக் குதிகொள்ள
எங்கெழில் ஞாயிறு எழுந்தனன்என்று
பங்கயங்கள் முகம் மலர்ந்திடவே
வண்டொலிசெய்து மகிழ்ந்தனகாண்
கங்குல் விடிந்தது கண்டு முடிப்பிள்ளை
ஆடுக செங்கீரை! ஓங்கார நாதமொலித்தது
களித்து ஆடுக செங்கீரை!
செங்கை சிவப்பக்கை நிலத்தினி லூன்றி
தவழ்ந்து எழுந்து ஆடுகசெங்கீரை!
உள்ளங் குளிர உவந்தாடுக செங்கீரை!
சங்கொலி நாதமுடன் சேமக்கலமும் ஒலிசெய்ய
கிண் கிணிச்சதங்கைகள் காலசைவில்
நின்றொலிசெய்ய ஐயன் ஆடுக செங்கீரை!
மங்கல வாத்தியமிசைத்தன மகிழ்ந்து
ஆடுக செங்கீரை! விண்ணவர் வாழ்த்த
மண்ணவர் மகிழ ஆடுக செங்கீரை!
செந்தழல் மேனி துலங்கிட செம்பட்டுமின்ன
பொன்மணி மகுடமசைய ஆடுக செங்கீரை!
நன்னிமித்தமென நானிலமுய்ய ஆடுகசெங்கீரை!
திங்களும் தேய்ந்திடாது உயிர்காத்த கணபதி நாதனே
பாலச்சந்திரனே! பாருளோர் வியக்கப்
பயம் நீங்க ஆடுக! செங்கீரை

(2) சின்னஞ் சிறுநுதலில் சிதறும் மின்பொறி
நெற்றிக் கண் ணொளியில்
பற்றியுள்ளம் பறி கொடுத்தோம்
மின்னும் விழிச்சுடரில் மீதிப்பகை
கடிந்தோம் கரிமுகத்தண்ணலே!
கணபதியே! முடிப்பிள்ளையே!
கன்னல் மொழி கேட்கக் காத்திருந்தோம்
கஜமுகனே! வேலணைப் பதிவாழும்
முடிப்பிள்ளையே ! குஞ்சரமே!
இன்னல் வந்துற்ற போது இடிஇடித்து
முழங்கி மின்னி மழையெனவே
அருள் மழைதனைப் பொழிய
கன்னச் சுழிதனிலேஉன் சிரிப்பழகினை
அள்ளிப் பருகிநின்றோம் நீ
துள்ளி எழுந்து முழந்தாளிட்டு
அன்ன மெனஅசைந்து அழகாய்க் கையூன்றித்
தலைநிமிர்த்தி ஆடுக செங்கீரை!
உலகமுய்ய ஐய ஆடுக செங்கீரை!
பென்னம் பெரிய பெருச்சாளி வாகனனே!
பானை வயிற்றோனே! பக்தர்
குறைதீர ஐய ஆடுக செங்கீரை!
நன்மை பெருக நாயகனே! ஆடுக செங்கீரை!
வேலணை முடிப்பிள்ளையே! ஐய!
வேதனைகள் அகல ஆடுக செங்கீரை!

(3) பொன்பொலி மலர்கள் நொச்சி மத்தமோடெருக்கு
மந்தாரை அறுகு வன்னி
இருவாட்சி நந்தியா வர்த்தம்
செந்தாமரை செவ்வந்தி பிச்சி பாதிரி
மலர்கள் தூவி வணங்குவோம்
மன்னிய சீர்மறை நான்கும் ஓதி
அர்ச்சனைகள் நாம் செய்வோம்
தூபதீப மேந்தி வழிபடுவோம்
கன்னலும் கரும்பும் நற்கதலியும் தருவோம்
முக்கனியும் தேனும் உணத்தருவோம்
அப்பனே! அகிலமுய்ய ஆடுக செங்கீரை!
உண்ணப் பசும்பாலும் சருக்கரையும் பருப்பும்
மோதகமும் தந்து வளர்ப்போம்
ஐங்கரனே! அழகாய் ஆடுக செங்கீரை!
பொன்னிலங்கு முடியசைய நெற்றியில்
சுட்டி மின்ன காதிலணி குண்டலங்கள்
அசைய ஆடுக செங்கீரை!
சின்ன வளையினங்கள் அசைய மணியும்
முத்தும் மார்பினில் நின்றொலிக்க
ஐயன் ஆடுக செங்கீரை!
உன்னைத் தொழுதே காரியங்கள் இனிதேமுடிப்பார்
பக்திகண்டு அகங்குளிர்ந்து அல்லல்தீர
ஆடுக செங்கீரை! ஆடுக செங்கீரை!

(4) கல்லும் கசிந்துருகும் கடல்மேல் அலைதவழும்
வானத்து நிலாவும் ஒளிகாலும்
மீனினம் துள்ளிக் குதிகொள்ளும்
நெல்லும் வயலும் வளம்பெறும் நெடுநாட்பஞ்சம்
அகன்று பசிபட்டினி நீங்கிவிடும்
ஆனந்த மெங்கும் களிகொள்ளும்
சொல்லும் பலிக்கும் சோற்றுக் கவளம் விருந்தினர்க்கு
பசிப்பிணி போக்கும் மருந்தாகும்
மெல்லப் பிணிஅகன்று சாகும்
மல்லுக் கெழுந்து வருமசுரர் படை தன்னை
இனங்கண்டு அவர்தம் மதமடக்கி
பகைவிரட்டும் வேலணை விநாயகனே!
வெல்லும் வல்லபைக் கணபதியே! வேலணைவாழ்
முடிப்பிள்ளையே! எம் விக்கினம் தீர!
ஆனைமுகா அசைந்தாடுக! செங்கீரை!
புல்லிலும் புற்று மண்ணிலும் பச்சைச் சாணத்திலும்
எழுந்து எமக் கருள் செய்பவனே!
அல்லும் பகலும் தொழுமெமக்கருள்செய
அல்லிமென் மலர்ப்பாதம் வைத்து முழந்தாளிட்டு
செம்பவள வாய் சிரித்து ஆடுக செங்கீரை!
மூவாமுதலே ஆடுக செங்கீரை!
கொல்லும் பிணி மூப்புச் சாக்காட்டுப் பருவங்கள்போக்கி
என்றுமிளமை யோடிருந்தி ட அருள்
சுரந்து அன்பர்களிக்க ஆடுக செங்கீரை!

(5) பூவெடுத்துப் பூசனைகள் பலகோடி அர்ச்சனைகள்
செய்வோம் தூபதீபங்கள் காட்டி
பொன்மணிகள் ஒலித்து வணங்குவோம்
நாவெடுத்து நால்வேத மந்திரங்கள் ஓதிப்பிரணவத்தின்
பொரு ளுரைப்போம் சாமரைகள் எடுத்து
வீசி உபசாரங்கள் செய்திடுவோம்
காவடிகள் நாமெடுப்போம் கற்பூரச்சட்டிகள்
ஏந்தி நிற்போம் அங்கப்பிரதெட்சணம்
செய்திடுவோம் ஐயா ஆனைமுகனே!
தீவர்த்திகள் பிடத்துப் பிரார்த்தனைகள் பல செய்வோம்
ஐயா அகம்குளிர்ந்து அருள்சுரந்து
அல்லலுறும் அவனிகாக்க இரங்கி
நீ தவழ்ந்து மெல்லச் செங்கீரை ஆடுகவே!
கொள்ளை இன்பம் குலாவியன்னை
மடிமீதெடுக்கமுன் செங்கீரை ஆடுகவே!
பூதகணங்கள் பொலிந்து நின்றாட அன்னையும்
அப்பனும் எங்கள் வாழ்முதலே
ஆனைமுகன் என்று கொண்டாடச்
சீதக் களபச் செந்தாமரைப் பூம் பாதச்சிலப்பு
பலவிசைபாட ஆடுக செங்கீரை!
வேதமந்திர ரூபா ஆடுக செங்கீரை! பனிபடர்
கைலை மலைமகள் மதலாய்! ஆனைமுகா!
எழுந்தாடுக செங்கீரை! ஆடுக செங்கீரை!





# தாலப்பருவம் - 3

தாய் குழந்தையை தொட்டிலிட்டு ஆட்டுதல் எட்டாம் மாதநிகழ்வு.

*(1) சாலப்பெருங் கடற் பரப்பின் கரையோரம்*
*நாரைகளோடு நாரியரும் நாயகர்*
*வரவுக்காய் காத்திருப் பார்*
*சீலமிகவுடையார் வாழ்பதியாம் வேலணையில் அமர்ந்த*
*செம்பவளத் திருமேனிக் கற்பகமே!*
*அற்புதக் காவற் கணபதியே!*
*கோலப் பெருமஞ்சத் தங்கத் தொட்டில் கட்டிப்*
*பொன்னிலங்கு மணிகள் தூக்கி*
*நோகாதே மெத்தென்ற பள்ளியிட்டார்*
*ஆலமுண்ட கடவுளின் மதலையென்று மகிழ்கொண்டு*
*மகளிரெல்லாம் இசைபடிக் கெஞ்சுகிறார்*
*உன் குறும்புத்தன மடக்கிடுவாய்*
*சோலைப் பசுங்கிளியே! சொர்ணமே! கற்கண்டே*
*தேனே மரகதமே! மாதங்கனே !*
*கணபதியே! தாலே தாலேலோ!!*
*ஞால முய்ய வந்த மதலாய் முடிப்பிள்ளையே!*
*உன் புன்னகையில் மகிழ்ந்தோம்*
*ஐயா தாலே தாலேலோ!!*

(2) சாலவும் கார்மேகம் கவிந்திடாது காவல் செய்து
சந்திரனும் ஒளிவிளக்கம் செய்ய
தாரகைகள் விடாது மின்விளக்கேற்ற
சீலமிகு குழந்தை முடிப்பிள்ளைக்குப் பரிசெனவே
பாளைக் கமுகு விரிந்துநின்றுகவரிவீச
மல்லிகை முல்லை பந்தரிட
கோல அழகு கண்டு குயிலினத்தின் சிங்காரப்
பாட்டுக்கு ஓங்கார மயிலாட
தூங்காதே புள்ளினம் சேர்ந்து இசைபாட
ஞாலமும் மையல் கொண்டு ஞானமுதல்வன்
கண்வளரக் காத்திருந்து வணங்க
வந்து பக்தி கொண்டாடுகிறார்
ஏலவார்குழல் மடவார் எழிலார் பொன்னணி
முத்து வடந் தொட்டாட்டுகின்றார்
ஏரம்பனே தாலே தாலேலோ!!
வேலணைப் பதியமர்ந்த முடிப்பிள்ளையேமூத்த
விநாயகரே! தாலே தாலேலோ!!
உமைகுமரா! தாலே தாலேலோ!!



(3) உன்மத்தனாய சிவனும் களிறென நின்ற போது
உமை பிடியாகி உவந்தவேளை
ஆனைமுகனாய் அவதரித் தோய்
அன்னை பராசக்தி அரவணைத்து மடிமீதமர்த்தி
உச்சிமோந்த பிள்ளையே! ஆனைமுகா!
அகில மெலாம் ஆளவந்தனையோ
என்ன அதிசயம் உமை சிவனாரின் மூத்தபிள்ளை
முடிப் பிள்ளையாய் வேலணைப்
பதி அமர்ந்தோய்! கற்பகமே!
கன்னத்தில் முத்தமிட்டு கனகமணிப் பொற்கரங்கள்
நீவி குறங்கின்மிசை அன்னையவள்
உமை கண்வளரச் செய்தபிள்ளாய்!
கண்மணியே! கண்டா மணி ஒலிக்க ஊரார்
உறக்கம் குலைந் தெழுமுன்
கணபதியே! கண்வளராய் கண்மணியே!
முன்னம் தோன்றிய முத்தே ! தாலே தாலேலோ!!
மூவா முதலே! தாலே தாலேலோ!!
வேலணைப்பிள்ளாய் தாலே தாலேலோ!!



(4) தாதவிழ்ந்த பொற்கொன்றை தாமம் தூக்க
தென்னை இளநீர்க்குலைகள் தர
தேன் கதலியொடு மாம்பழங்கள் சிந்த
மேதகு கடலன்னை அலைக்கரங்கள் மெல்லநீட்டி
முடிப்பிள்ளையே வாவென்று
சங்கமூதி மகிழ்ச்சி கொண்டாட
பூதகணம் புவனமெலாம் பொலிந்து ஆட வானவரும்
மண்ணவரும் கைகூப்பித்தொழ
பூவனமும் பூத்துக்குலுங்கி மணம்வீச
சாதகமாய் வயற் பரப்பில் விளைந்த செந்நெற்
கதிர்கள் முற்றித் தரைத்தாயை முத்தமிட
சீதமிகு தென்றலும் வந்து வந்து மெல்லவீச
மேன்மையுறு சைவநெறிதழைத்
தோங்கக் கண் வளர்வாய்
ஏதமிலாச் சங்கினங்கள் வேத ஒலி செய்யநாளும்
அந்தணர்கள் பூசை வழிபாடற்றும்
கோயிற்பிள்ளாய்! தாலே தாலேலோ!!



(5) ஞானத்திரு உருவே நான்மறைக்குத் தனித்துணையே!
வேலணைக்கு ஒரு முடிப்பிள்ளையே!
பூதகண நாதனே! தாலே தாலேலோ!!
மோனத்தின் முடிவே மூவாமுதலே! முக்கண்ணனே!!
அரன் இரதம் அச்சறுத்த அரசே!
ஐங்கரனே! தாலே தாலேலோ!!
கனக்குறத்தி வள்ளியை காதலித்த முருகனுக்கு
அருள் செய்ய ஆனைமுகனாய்
வந்தாய் தாலே தாலேலோ!!
கூனற் பிறை சடைதுலங்க மன்றினில் நின்றாடும்
தில்லைக் கூத்தன் திருமகனே!
ஞானக் களிறே தாலே தாலேலோ!!
வானநாடரும் போற்ற அவ்வையைக் கைலை
சேர்த்த கணபதியே! பக்தருக்காய்
மகிழ்வாய் தாலே தாலேலோ!!
ஈனப்பிறவி அறுத்து இன்னல் பல அகற்றி
இன்பமாம் வீடெய்த அருள்
சுரந்துநிற்கும் பிள்ளாய்! தாலே தாலேலோ!!





# சப்பாணிப் பருவம் - 4

குழந்தை சப்பாணி கொட்டுதல்
ஒன்பதாம் மாதம்.

(1) குருட்டுப் பாப்புருவாகிய திருமால் சாபம் நீக்கிய
பெருமையனே! தண்ணளி செய்து
திருட்டுக் காக்கை வடிவம் எடுத்தனையே அகத்தியர்
கமண்டலம் கவிழ்த்தபெருமையு முனக்கே!
அருநெறி பிழைத்த அற்பரையழிக்கக் கையில் அங்குச
பாசம் ஏந்தினையோ ஆனைமுகா!
கருத்தா யிருந்து பக்தரைக் காக்கும் பணியுனக்கே
அம்பிகை புதல்வா வேலணைப் பதியுறைவோய்!
கரும்பும் கதலியும் தேனும் தருவோம் அப்பமும்
அவலும் படைப்போம் விநாயகனே!
மருப்பொன் றொடித்து பாரத மாக்கதை எழுதிய
கரத்தால் சப்பாணி கொட்டியருளே!





(2) மட்டுண்டு வண்டாடும் சோலைகளுண்டு வேலணையில்
மதுவுண்டு கொண்டாடத் தென்னை பனைகளுண்டு
கொட்டுண்ட மாங்களிகள் உண்டு மகிழ் புள்ளினங்கள்
கவிபாடும் வளமுண்டு வயலுண்டு வினை
பட்டுண்ட பக்தர்கள் புடைசூழ்ந்து பணிசெய்ய நாளும்
வேலணைக் கோயிலிலே குடிகொண்டு
கட்டுண்டு களிப்புடனே பூசனைகள் வேதமந்திரங்கள்
ஏற்று மகிழ்ந்துறையும் முடிப்பிள்ளையே!
தட்டுண்டு பரவைக்கடல் விட்டகன்ற சங்கினங்கள்
கரைதட்டி ஓங்கார நாதம்முழங்க
சட்டென் றெழுந்த கருணை மழை பொழிகவென
கரங்கள்தூக்கி கொட்டுக சப்பாணி!





(3) அச்சமேது வாழ்வதற்கு சுந்தரமாய் சுதந்திரமாய் நாம் வாழ

வழிகாட்டும் தெய்வம் நீயே வேழமுகமுடையாய்!

பச்சோந்தி நிறம்மாறும் பகைவரை இனங்கண்டு இனிது

கெச்சிதமாய் அழித்து அருள் செய்பவனே!

துச்சமென மதியாத தூர்த்தருக்கு மருள்செய்து

துதிக்கையால் தூக்கிவிடும் நம்பிக்கையே!

கொச்சைத் தமிழில் விஞ்சுதமிழ் கேட்ட ஔவைக்குச்

சங்கத்தமிழ் உரைத்த ஞானமுதல்வனே!

பச்சைக் கற்பூரஒளியில் மருக்கொழுந்து வாசனையில்

செக்கச் சிவந்த திருமேனி அழகுகண்டோம்

பச்சைக் கிளிமொழியால் எம்மை மகிழ்வித்துதும்பிக்கை

தூக்கிக் கொட்டுக சப்பாணி!





(4) மந்திரங்களால் அறியோம் மாயத்தினால் அறியமாட்டோம்

அன்பருளக் கோயிலுறையும் உண்மை கண்டோம்

தந்திரங்கள் செய்யாத உத்தமர்தம் ஆணை என்றும்

நீகடந்ததில்லை ஐயா! ஆனைமுகா!

தொந்திக் கணபதியே! தோத்திரங்கள் பாடித்தோப்புக்

கரணமிட்டு வழிபடுவோம் உன்முன்னே

சுந்தரமாய் நின்றொளிர்வாய் சூரியனாய் ஒளிதருவாய்!

சுகங்கள் செய்வாய் துயர்தீர்ப்பாய்!

அந்தரத்து வானவரும் வரங்கள் வேண்டி வந்துவந்து

போகும்பெருமை யுனக்குண்டு பேரருளே!

துந்துபி முழங்க மந்திர ஒலிமுழங்கத் தும்பிக்கை

தூக்கிச் சப்பாணி கொட்டி அருளே!





(5) மங்கையைப் பாகம்வைத்து கங்கையைச் சடைமேல் வைத்த
சிவனாரின் மூத்தபுதல்வா! முடிப்பிள்ளையாய்!
கங்கணங்கள் கையிலொலிப்ப அன்னை மடிமீதமர்ந்து
செங்கை சிவப்ப உவந்து சப்பாணி கொட்டியருள்க!
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! தூங்குகை யெடுத்து
துன்பங்கள் நீங்கச் சப்பாணி கொட்டியருள்க!
திங்களையும் ஞாயிற்றையும் சக்கரங்களாக்கி
முப்புரங்கள் எரிக்கவருள்செய்த முதல்வா!
பங்கமது வாராது சிவனைக்காத்த கணபதியே! வேலணைப்பதி
வாழ்பவனே! சிங்காரமாய்ச் சப்பாணி கொட்டி அருள்க!
சங்கத்தமிழ் வேண்ட ஔவைக் கருள் சுரந்தாய் கணபதியே!
பொங்குதமிழ் ஒலிக்கச் சப்பாணி கொட்டியருள்க!





# முத்தப்பருவம் - 5

## குழந்தையை முத்தம் தரவேண்டுதல்
## 11ஆம் மாதம்

(1) கலைமலிந்த கோயிலிலே கண்டு களிக்க
வளமுண்டு வயலுண்டு பொழிலுண்டு
அலைமோதுங் கடலுண்டு வரிசங்க மிசைபாடும்
புரிந்ததனை மீட்டுக் குயில்பாடும்
வேலணைப் பதியில் கோயில்கொண்ட பிள்ளாய்!
அன்புட னகமகிழ்ந்து முத்தந்தருகவே!
கோலஞ்செய் துங்கக் கரிமுகத் தூமணியே!
சங்கத் தமிழே! முத்தந் தருகவே!
மலையுருவே! மாணிக்கமே! மாலையணிந்து
வணங்குவோம் மனமுவந்து முத்தந்தருகவே!
விலையிலா ஞானத்தை விருந்தாகத் தருபவனே!
ஞானமுதல்வா மங்களமுத்தந் தருகவே!
கலையாத கல்வியும் குறையாத செல்வமும்
நிலையாகத் தருவோய் முத்தம் தருகவே!
அலையாழி சூழிலிலங்கை மண்ணில் நிலையாக
வேலணைப் பதியாள்வோய் முத்தம் தருகவே!



(2) ஞாலமெலாம் போற்றும் ஆனைமுகா இறைவா!

ஐங்கரனே! தலைவா! உனக்குப்

பாலொடு பன்னீர் பஞ்சாமிர்தம் சந்தன

அபிடேகம் தந்து வழிபடுவோம்

வேலணைப் பதிமேவும் ஓங்கார ரூபனே!

அற்புதக் கணபதியே முத்தந்தருகவே!

சீலமொழிந்து பலநாட் கழிந்தன சிறப்புகழ்

நாமிழந்தோம் இருப்பது சிலநாள்

காலமொழிந்தது கவலைகள் மலிந்தன என்று

மனங்குமுறும் அடியவர் மனங்குளிர

சீலமிகக் கொண்டு சிந்தை மனமகிழ்ந்து சிங்கார

முத்தமருள் வாய்! சிங்கார முத்தமருள்வாய்!

ஆலமுண்ட கண்டனின் அருட் குமரா! ஆனைமுகா!

ஆதரவற்றவற்கு அருள்செய்யுங் கஜமுகனே!

ஏலவார் குழல் மங்கையுமை மகிழ உலகெலாம்

மகிழ உவந்து முத்தந்தருகவே!



(3) மருப்பொன் றொடித்து மாமேருவில் மறைபொருள்

பதித்த முதல்வா! முக்கண்ணனே!

திருநாகைக் காரோணப் பதியுய்ய இருந்து

தமிழ் சைவங்காத்த தலைவா!

திருமுறை ஏடுகள் சிதம்பரத்தில் எடுக்க

நம்பிக்கு அருள்புரிந்த குருவே!

அருமறைகள் ஆகமங்கள் திருமுறைகள் ஓதி

வழிபடுவோம் ஐயா முத்தம் தருகவே!

திருவுருவங் கண்டு தொண்டர் குழாம்மகிழ

உமைமடிமீதிருந்து முத்தந் தருகவே!

திருக்கரங்கள் பத்தும் திருமுகங்களைந்து முடைய

பஞ்சமுகமே! பிணிதீர்க்கும் பரனே!

அருந்தவத்தோர் காணா அருமருந்தே! ஆனைமுகா!

அருளமுதம் பொழிந்து முத்தந்தருகவே!

கருவிலுரு வாகிவந்த கற்பகக் களிறே! தேனிலும்

இனியாய் தெள்ளமுதே! முத்தந் தருகவே!



(4) திருவளர் வேலணைப் பதிசெய் தவத்தாலங்கு
குடிகுலங்கள் காக்கும் கணபதியே!
வருமிடர் தீர்த்தலோடு புதுஇடர் கெடுத்துப்பக்தர்
தருமிடர் களைவாய் ஐயா!
பெருவரம் நாளும் நல்கும் ஞானப்பிள்ளையே!
ஒருவரமாக முத்தம் தந்தருள்செய்க!
மருப்பொடித்துக் கஜமுகனை கொன்ற களிறே
கருணைக் கடலே! முத்தந் தருகவே!
விருப்பொடு அறுகு சாணி அறுகம்புல் கொண்டழைக்க
வந்திடுங் குணபதியே! முத்தந்தருகவே!
அருவாய் உருவாய் அகந்தனில் ஒளிர்வோய்!
குருவாய் வந்துமுத்தந் தருகவே!
பெருவயிறும் பெருச்சாளி வாகனமும் தருமருப்பு
இரண்டுடனே வந்துமுத்தந் தருகவே!
பெருவிருந்தாய் பேரருளாய் வேழமுகமாய்
ஞானமுதல் வனாய் வந்து முத்தந்தருகவே!



(5) சின்னக் குழந்தை நீ சிங்காரப்

பாட்டிசைப்போம் சீராக எம்

கன்னங்கள் குளிர கையால் அணைத்து

நீ அன்பு முத்தந் தந்தருள்க!

வன்னப் பட்டாடை வாகாயுடுத்து

அணி கலன்கள் அணிந்திடுவோம்

கண்ணே மணியே கற்கண்டே என்போம்

முடிப்பிள்ளாய்! இனியமுத்தம் தந்தருள்க!

சொன்னபடி கேட்போம் தோப்புக்கரணம்

போட்டிடுவோம் தேங்காயுடைத்து

இன்னமுது படைப்போம் வேலணைப்

பதியாளும் மதலாய் முத்தந்தருகவே!

உன்திருக் கோயில்வாசல்த் திருப்பணிகள்

நாமுவந்து செய்வோம் ஐய!

அன்னத்தைக் கிளியை அம்புலியைப் பிடித்து

விளையாடத் தருவோம் அருள்முத்தந் தருகவே!



## வருகைப் பருவம் - 6

குழந்தையை அருகில் வர அழைத்தல் 12ஆம் மாதம்.

(1) காரூரும் வானம் கவிந்து கடலலை
போய் மேலூரும் பெரிய
நீரூரும் ஆகும் வேலணைப் பதி
வாழும் பக்தரெல்லாம்
நாலூரும் பேசும் நற்புகழைத்
தேடி நான்மறைகள் ஓதி
வேரூறும் வேதனைகள் தான்மறந்து
வேழமுகத்து முடிப்பிள்ளை
பாரூரும் பக்குவத்தால் எங்கள்
பிள்ளை யாரே என்று
சீரூரும் வேலணை மண்மிதித்து
மெல்ல ஐயன் வருகவருகவே!



(2) சந்திரன் சாபந்தீர்த்து வாழ்வழித்த

பாலச் சந்திரனே வருக!

சங்கத்தமிழை தமிழ்க்குலத்து அன்னைக்கு

அளித்த தமிழே! வருக!

துங்கக் கரிமுகத்துத் தூமணியே! வருக!

தொப்பை அப்பனே! வருக!

எங்குமிலாத தோர் இன்பப்பொருளே வருக!

ஏரம்ப மூர்த்தியே! வருக!

தொந்தி சரியவருக! தூங்கு கைய வருக!

ஐய வருக! ஆனைமுகா வருக!

தந்தி முகா வருக! திந்திமிதோ மென்று

நடை பயின்று வருக! வருகவே!



(3) புண்ணிய தீர்த்தத்தால் மஞ்சனமாட்டி

வெண்ணீறும் சந்தனமும் பூசுவோம் வருக!

கண்மணியே வருக! கனகப்பட்டாடை

புனைவோம் மகிழ்ந்து வருக!

பொன்னணி மகுடம் சூட்டுவோம் வருக!

உத்தரியப் பட்டுடுப்போம் வருக!

புண்ணியக் கொழுந்தே! வருக! புனிதரே

வருக! ஐயவருக! ஆனைமுகனே வருக!

எண்ணிய கருமம் முடிப்பவரே! வருக! காலினில்

சதங்கை கொஞ்சவருக! ஏந்தலே வருக!

நண்ணினர்க் கினியாய் வருக! ஞானநாயகனே வருக!

மண்ணவர் கிறையே! வருக! வருகவே!



(4) பைநாகம் பயின்றாட மன்றில் நின்றாடும்

பரமசிவன் மகனே வருக!

கைநாகமே வருக கணபதியே வருக!

கதியற்றவர்க்கருள் புரியவருக!

மைநாக மலையே வருக! மும்மதம்பொழியும்

வேழ முகமே வருக! வினைதீர்க்கவருக!

தெய்தெய் யெனக் காலெடுத்து வருக! கிண்கிணி

நாதம் ஓங்காரம் ஒலிக்கவருக!

தையல் சிவகாமித் தாய்மகிழ வருக! தரணி

உய்யவருக! அழகுநடைபோட்டு வருக!

மையல் மானுடப் பிறவிப்பிணி அகற்றவருக!

மாதங்கனே! வருக! வருகவே!



(5) மூலப் பொருளே வருக! முழுஞானப்

பெருக்கே வருக! மூஷிகவாகனனே வருக!

கோலப் பெருமையனே வருக! கொழுங்கைக்

குஞ்சரக் கன்றே! வருக!

ஞாலமுய்ய வருக! நண்டுலாவிவர

நத்தினம் முரலும் பரவைசூழ்

வேலணைப் பதிமுதல்வா வருக! எங்கள்

முடிப் பிள்ளையாரே வருக!

சோலைப் பசுங்கிளிகள் உன்னாமம்

பேசினகாண் சுந்தரனே வருக!

காலனைக் காலாலுதைத்த கடவுளின்

குமரா! வருக! வருகவே!



# அம்புலிப்பருவம் - 7



குழந்தையோடு விளையாட அம்புலியை அழைத்தல் 18ம் மாதம்.

(1) விண்ணுலவு தாரைகள் நாயகன் என்றநினைப்போ
அதனைவிட்டு எங்களிறை வேலணைப்பிள்ளை
அழைக்கிறான் அம்புலி ஆடவாவே!
மண்ணுலகும் விண்ணுலகு மேத்துமிறை விநாயகனே
என்றறிவாய் தேய்ந்து வளருந் திறனுடையாய்
தந்திமுகனழைக்கின்றான் அம்புலி ஆடவாவே!
கண்ணுதலான கைலை மலைமேவு முமைபாகன் திருமுடியில்
வாழ்வு பெற்ற அம்புலி! ஆடவாவே! ஆனைமுகன்
அழைக்கிறான் அம்புலி ஆடவாவே!
அங்குச பாசமகல ஆயுதங்கள் நீக்கிவிட்டான் மூத்த
முடிப்பிள்ளை வேலணைக்கோயில் முன்றலில்
நின்று கரம்நீட்டுகிறான் அம்புலி ஆடவாவே!



(2) வானுலாவும் வெண்மதியே! வாகாயொளி வீசுகிறாய்
வாழ்வு பெறுவாய்! நல்லவளம் பெறுவாய்
ஏரம்பன் நீட்டுகரம்பார்த்து அம்புலி ஆடவாவே!
தேனுலவும் சோலை மலருக் கலையாதே எங்களிறை
முடிப்பிள்ளை மூத்தபிள்ளை அன்புடனே
அழைக்கின்றான் அம்புலி ஆடவாவே
பானிலவைப் பொழிவதனாலேது பயன் பராமுகம்
செய்யாது படஅரவுக் கஞ்சாது
நம்பிக்கை கொண்டு அம்புலி ஆடவாவே
தேனினுமினியன் முதல்வன் உனக்குவாழ்வளித்த
சிவனாரின் மகனழைக்கின்றான் கானிலெறித்த
நிலவாகாதே! அம்புலி ஆடவாவே!



(3) தங்குவெண் மருப்பு இரண்டுடையான் தரணி போற்றுத்
தலைவனிவன் தந்திமுகன் வேலணைமுடிப்
பிள்ளை அழைக்கிறான் அம்புலி ஆடவாவே!
சங்கு வெண் குழையன் வார்சடை படவரவு பிறைசூடி
தார்குழலுமை பங்கன் மகனிவனறியாயோ
இவன் நீட்டு கரம்கண்டு அம்புலி ஆடவாவே!
திங்கள் முகத்து மாதினியார் பெண் மோகம் விட்டு
ஓடிமறையாமல் ஐங்கரன் அழைப்பை
ஏற்று அம்புலி ஆடவாவே!
உண்ணா னுறங்கா னுன்னினைவால் அழுங்குகிறான்
கங்குல் விடியுமுன்னே காத்திருக்கும்
கணபதியுடன் அம்புலி ஆடவாவே!



(4) காலை முதல் வான மெலாந் தேடினோம் கலைவடிவே
வானுலாவும் வண்ண மதியே! ஆனைமுகன்
நீட்டுகரம் கண்டு அம்புலி ஆடவாவே
பாலையொத்தாய் வானிலவே! வானம்விட்டு நீயிறங்கு
பசுங்கிள்ளை மொழிபேசும் ஞானியிவன்
கலைஞன் அழைக்கிறான் அம்புலி ஆடவாவே!
மாலைப்பொழுதெல்லாம் உனதாட்சி என்ற செருக்கோ
பாலனென்று எண்ணிவிடாதே பலகலையும்
தந்திடுவான் அம்புலி ஆடவாவே!
மாலைப்பொழுதை வீணாகக் கழிக்காதே! வெண்ணிலாவே
வேலணைப் பதி வாசலிலே முடிப்பிள்ளை
அழைப்பையேற்று அம்புலி ஆடவாவே!



(5) தேய்ந்து வளர்ந்து வருமுன் செயலுக்கிரங்கிநல்
வாழ்வழிப்பான் மீண்டொருகால் தேயமுன்
அழைப்பையேற்று அம்புலி ஆடவாவே!
பாய்ந்து நீ வந்துவிடு பாவமெல்லாம் போக்கிடுவான்
ஞானமுதல்வன் நாயகன் நீட்டு நேசக்கரங்
கண்டு அம்புலி ஆடவாவே!
தோய்ந்து கடலில் சூரியனும் மெல்ல மறைந்துவிட்டான்
வெம்மை தாளாத உயிர்க் குலங்கள் காக்கும்
கணபதி அழைக்கிறான் அம்புலி ஆடவாவே!
சாய்ந்த பொழுது கண்டு சங்கையாய் உலவிவரும்
அம்புலியே ஏரம்பனோடு ஆடவருவாய் இருகை
நீட்டியழைக்கிறான் அம்புலி ஆடவாவே!



# சிற்றில் பருவம் - 8

சிற்றில் அமைத்து விளையாடும் பெண்கள் குழந்தையை சிற்றில் சிதைக்க வேண்டா மென வேண்டுதல் 2ஆம் ஆண்டு.

(1) வெள்ளை மணல் வீதியெல்லாம் வேப்பமர
நிழலிருக்கும் வெள்ளலைகள் வந்து
வந்து மெல்ல விளையாடிச் செல்லும்
கள்ளிருக்கும் தென்னை பனை கமுகு பலா
மரங்களூடே தேமா மலர்ந்திருக்கும்
தேமாங்கனி மரத்தில் எல்லாம்
புள்ளிருக்கும் சோலை சூழ் வேலணைப் பதியமர்ந்த
முடிப்பிள்ளையாரே! தஞ்சம் தருவாய்
வஞ்சம் தீராதே வாழவிடு!
நள்ளிருளும் பகலென்றும் பாராமல் அலைந்தோம்
இருக்க வீடின்றி சிறுகையால்
நாமிழைத்த சிற்றில் சிதையாதே!
பள்ளிச் சிறுமிகள் நாம்மணலில் பாங்காயமைத்த
சிற்றில் சிதையேல்! பாகும் பருப்பும்
தருவோம் எம் சிற்றில் சிதையேல்! சிதையேல்!
வள்ளி நாயகிக்கு வாழ்வளித்த கணபதியே கரும்பும்
கதலியும் இப்பொழுதே தந்திடுவோம்
விளையாட்டாய் எம் சிற்றில் சிதையேல்!
துள்ளித் திரிகின்றாய் துதிக்கை தூக்குகின்றாய்
தத்தி நடக்கின்றாய் தந்திமுகனே!
வணங்கினோ மெங்கள் சிற்றில் சிதையேல்!
வெள்ளிப்பனிமலை இறைவன் மகனே! முடிப்பிள்ளாய்!
இரக்கம் சிறிதுமின்றி பிள்ளை விளையாட்டாய்ச்
செய்த சிற்றில் சிதையேல்! சிதையேல்!



(2) அஞ்சா நெஞ்சினர் அந்நியர் ஆட்சியில்
ஈவிரக்க மற்ற அடாவடித்தனங்கள்
பலவும் எமக்குப் புரிந்தார்
வஞ்சகம் செய்தார் சைவக்கோயில் கள்பலவும்
கோபுரங்கள் எல்லாம் இடித்து
இன்னல் செய்தனர் இம்சித்தவேளை
குஞ்சரக் கடவுள் வேலணையான் கோயில்
இருக்கையும் இடிக்க முற்பட்டவேளை
அதிசயம் செய்து இடிக்கவிடாது தடுத்து
பஞ்சமிப் பேய்களைத் துரத்தி யடித்து அஞ்சேலென்று
அருள் புரிந்து முடியுட னிருந்து
காட்சி தந்தருளிய பிள்ளையே !
நெஞ்சம் மகிழ அடியவர் மெய்யுருகி நிற்க
அன்பினால் அருள் செய்வான் கோயில்
வேலணைப் பதியமர்ந்த முடிப்பிள்ளையே!
தஞ்சம் புகுந்தோம் நிஷாப் புயல் வெள்ளத்தால்
வந்து குவிந்த வெண்மணல்
சேர்த்து நாமிழைத்த சிற்றில் சிதையேல்!
பிஞ்சுகள் சிறுசுகள் சிறுகையால் அளைந்து
ஆக்கிய அழகிய சிற்றில்இது
ஐயனே! கெஞ்சுகிறோம் எம்சிற்றில் சிதையேல்!
பஞ்சாமிர் தத்தால் பாலால் அபிடேகம் செய்வோம்
செவ்விள நீரும் கரும்பும் தருவோம்
நாமிழைத்த சிற்றில் சிறுகாலாற் சிதையேல்!



(3) ஆதிசிவன் பாதிபார்வதி அகமகிழும் ஆனைமுகா!
வேலணைப் பதியில் குடியமர்ந்த
முடிப் பிள்ளையே! மூவாமுதலே!
ஆதிசேடன் பாம்பணையில் அறிதுயில் கொள்ளும்
பரந்தாமன் இழைத்த பிழையால்
குருடாகச் சாபம் பெற்று
நீதி கேட்டுப் பணிந் துன்னை அன்புடன் வழிபட்டுப்
பூசனைகள் புரிந்த வேளை
குருடு நீக்கி அருள் புரிந்தனையே!
பாதி யாய் சந்திரனிளைத்த போது சாபந்தீர்த்து
வாழ்வளித்த பரமசிவன் மதலையே!
வேலணைப் பதிவாழ வைக்கவந்த
சோதியே! சுடரே! சிறுமிகள் பெண்கள்
அழகாக நாமிழைத்த சிறியசிற்றில்
சிறுபாதத்தால் சிதையேல்! சிதையேல்!
காதிலணி குண்டலங்கள் அங்குமிங்கு மாட
மார்பிலணி முத்துவைர மணிகளசைய
விளையாட்டாய் வினையாய் எம்சிற்றில் சிதையேல்!
நீதிகேட்டோம் நியாயங்கள் பல கேட்டோம்
பயனின்றி நிறைந்தன அழிவுகள் மிகுந்தன
தருமங்கள் பிழைத்தன தரணியிலே
சோதிக் காமல் எம்துயரங்கள் தீர்த்து ஆட்கொள்வாய்
வாயார வாழ்த்துகிறோம் வணங்கிநிற்போம்
நாமிழைத்த சிற்றில் சிதையேல்! சிதையேல்!



(4) கலைமதியைக் கண்ட கடல்மகளும் மதிமயங்கி
ஆர்ப்பரித்து ஆடி அலையெழுப்பி
மெல்ல நெளிந்து வந்து
அலைக் கரங்கள் கடல்பரப்பில் மணற்குப்பை
குவித்துச் செல்வாள் செய்கை
கண்டுளம் மகிழ்ந்தோம் வியந்தோம்
மலையெனக் குவிந்த வெண்மணற் குன்றினில்
சிறுமியர் சிற்றடியார் கூடியிருந்து
சிறுகையால் அளைந்து நாமமைத்த
கலைமிகு அழகிய வண்ணச் சிற்றில் பலவுண்டுதரணி
போற்றும் தலைமையிறைவன் நீ
நயமாய் நாமிழைத்த சிற்றில் சிதையேல்!
சிலையழகே! சிந்துரக்கணபதியே! இருதினை மாவில்
விளக்குச் செய்து தாமரை நூலிட்டு
பசுநெய்த் தீபமேற்றி வழிபடுவோம் ஐய!
கலையாத கல்வியும் குறையாத செல்வமும் நல்கும்
வேழமுகத்தெழிலா! வேலணை உறைவோய்
கருணைகாட்டி எம்சிற்றில் சிதையேல்!
விலையேதும் கேட்கில் தருவோம் ஐயா! நயமாக நாம்முயன்று
வேலணைக் கோவில் மணலில் சிறுமியர்
கூடிச்செய்த சிற்றில் சிதையாதே!
அலையாளி பாம்பணையில் துயில் கொள்ளும் பரந்தாமன்
வேண்ட அருள்செய்த கருணைக்கடலே!
அடியவர் சிறுமிகள் சிற்றில் சிதையேல்! சிதையேல்!



(5) மறையவர் ஓதும் வேதம் ஓங்கார நாதம் காதில் ஒலிக்க
முடிப்பிள்ளையாரின் கண்டா மணியு மொலிக்க
கேட்டு உளம் மகிழ்ந்தோம் எம்
குறை பட்டென்றகன்றது மனம் குதூகலித்தது ஓடினோம்
கோயில் வாசல் கற்பூர ஒளியில் கணபதி
முகம் கண்டோம் களித்தோம்
கறை மிடற் றண்ணல் தந்த கற்பகமே! கஜமுகனைச்
சம்கரித்த வேழமே! வேலணை
வாழ் முடிப்பிள்ளையாரே எங்கள்
முறையீடு கேட்டருள்க எம்குறை தீர்த்தருள்க
பொன்னொளி வீசிய கதிரவன் மறைந்தான்
இருண்டது வானம் மெல்ல மெல்ல
கறையிருள் போக்க வெளிச்சந் தந்தன தாரகைகள்
தண்ணொளி பரப்பின நடுவே
வண்ண முகத்தழகி தோன்றினாள்
நிறைநிலவாய் நின்று பால்நிலவைப் பொழிந்தாள் தெளிவாய்
நின்றாள் வேலணைக் கோயில் மணற்பரப்பில்
கண்கொள்ளாக் காட்சியிது உன்னடியார்
குறையிரந்தோம் முடிப்பிள்ளையே! வெள்ளிநிலவொளியில்
தெளிவாகத் தெரியும் எம்சிற்றில் சிதைத்திடாதே
உன்னடியவர்கள் வேண்டுகிறோம் பணிந்து
பிறையாளன் திருமகனே! பிழையிருப்பின் பொறுத்திடுவீர்
நாமிழைத்த சிற்றில் விளையாட்டாய்
வினையாய்ச் சிதையேல்! சிதையேல்!



# சிறுபறைப்பருவம் - 9

குழந்தையைச் சிறுபறை கொட்டுமாறு வேண்டல் - (3ஆம் ஆண்டு)

(1) இந்திரன் இரந்துவேண்ட இமையவர் அதிசயிப்ப
பூமகளும் புன்னகையால் பூக்க
முந்து தமிழ்முனிவன் தவத்தின் மிக்கான்
கமண்டலத்தை காக்கையாய்ப் பறந்து
வந்து திருவிளையாடல் செய்தாய் கவிழ்த்தாய்
காவிரியை கட்டவிழ்த்துப் பாயவிட்டாய்
அந்தமில இவ்வற்புதம் பேசிப்பேசி உலகமெலாம்
பூரித்தே போனதையா ஆனைமுகா
உந்தன் அளவிலா ஆற்றலாலே ஐந்தொழில்
மகிமை காட்ட கஜமுகனை
சங்கரித்து அருள்கொடுத்து பெருச்சாளி வாகனப்
பெரும் பேறும் அளித்து வந்தாய்
தந்திமுகனே தருணமிது தவறாது வேலணையில்
கோயில் கொண்ட முடிப்பிள்ளையே!
முந்தியே வந்தெம் வினைகள் தீர்த்து வீதியெலாந்
தூய்மை பெற பறைகொண்டு முழக்கிடுக!



(2) அலையிலங்கு கடற்பரப்பின் அருகே காத்திருக்கும்
நாரைகளும் பறவைகளும் கூச்சலிட்டு
விலையுயர்ந்த துள்ளிவிழும் மீன்களைக் கொத்தி
விக்கியுண்ணும் கடல்மலிந்த ஊராம்
வேலணைப் பதியமர்ந்து வேண்டுவார் வேண்டியவா
வரமளிக்கும் வரதன் முடிப்பிள்ளையே!
தலையிலங்கு வெண்பிறையும் கங்கையும் கொண்ட
மங்கை பங்கன் தில்லைக்கூத்தன்
மலையுயர்ந்த கைலையாளும் கடவுள் கைலாய
நாதன் மனமுவந்த மதலாய்!
மலைக்குறத்தி வள்ளியைக் கந்தனுக்கு மணம்
முடித்து வைத்த கணபதியே
கலையிலங்கு கடவுளே கணபதியே வெண்மருப்பும்
துதிக்கையும் முறச்செவியு முடையோய்!
மலையென வருமிடர் மடிந்திட துதிக்கை
தூக்கிச் சிறுபறை முழக்கிடுகவே!



(3) அந்நியர் ஆட்சி மாற்றம் காலந்தோறும் நடைபெற
அவலமுற்றோம் அலைந்தோம் உன்
சந்நிதியைச் சரணடைந்தோம் சாலப் பெருவருத்தத்தால்
உன்னையே தஞ்சமானோம் முடிப்பிள்ளையே!
தொந்திக் கணபதியே! அந்தணர் மந்திரங்கள்
பூசனைகள் ஏற்றுவழிபாடுகள் ஆற்றுகிறார்
முந்தையோர் மரபில் நின்றோம் மூத்த கணபதியே!
முனியாமல் எம்மைக் காத்தருள்க!
சந்ததிகள் கூடிவாழ வழியைக் காட்டு மனிதப்பேய்
பிசாசு பூதகணங்கள் யாவும்
நிந்திக்கும் பழிவாங்கும் மனிதவேட்டை யாடும்
மிருகத்தனங்கள் போக்கிடுவாய் ஐயா!
வந்தித்தோம் பாலும் தெளிதேனும் பாகும் பருப்புடனே
முக்கனியும் உணத் தருவோம்
சிந்தை குளிர்ந்து குளிர் நிழலாய் வந்தெம் பயம்போக
துயர்தீரச் சிறுபறை எடுத்து முழக்கியருள்க!



(4) காலதேவன் கதைகேட்டு இயற்கையன்னை சீறினள்
புயலாக மழையாகப் புகுந்தாள் வெள்ளமாக
கோலமிதைத் தாங்காது குலைநடுங்கி மக்களெல்லாம்
புலம்பெயர்ந்தார் புண்பட்டார் புகலிடமறியார்
வல்லவரின் வருகையால் புண்பட்ட மக்களுக்கு அடிமேல்
அடியாய் இயற்கை வரமளித்தாள்
சொல்லரிய கொடுமைகளால் துயருற்றார் வீடுவாசல்
தாமிழந்தார் செய்தொழில் மறந்தார்
வெல்லரிய பகையால் சுற்றமும் பற்றும் விட்டார்
சுகங்களும் விட்டு விட்டார்
கல்லெறி பட்டவராய் மனக்காயங்கள் தன்னோடு
வயல்புலமும் வளநிலமும் கைவிட்டார்
வல்ல கணபதியை மட்டும் கைநழுவ விட்டிடாமல்
கைதொழுதார் நம்பினார்! மக்கள்
கல்லையொத்த மனமுருகிநின்றவர் மனங்குளிர
பகைநடுங்க ஐங்கரனே சிறுபறை முழக்கிடுக!



(5) வயல்புலங்கள் செழித்தோங்கிப் பொங்குகதிர்
பரப்பி நிற்க வேண்டும் மக்கள்
பயம்நீங்கி பகலிரவு பாராது பக்தியுடன்பாடி
ஆடி வணங்கவருள் புரியவேண்டும்
கயல்க் கண்ணார் கன்னியர்க்கு காவலாய் நீயிருக்க
கற்புடனும் பொற்புடனும் வாழவேண்டும்
புயல் சிந்தி மழையெங்கும் பெய்யவேண்டும் பசும்
புற்றரைகள் பசேலென்று தோன்றவேண்டும்
மயல்நீங்கி இருளகன்று மக்கள் மனம் குளிரவேண்டும்
குட்டை குளம் நீர்நிரம்பி வழியவேண்டும்
அயல் புடையும் நன்றாக வாழவேண்டும் எமை
வருத்தும் பேயினங்கள் மாழவேண்டும்
நயவஞ்சகர் எம்மைவிட்டு அகல வேண்டும்
வேலணைப் பதியுறையும் பிள்ளையே!
புயபல பராக்கிரமம் படைத்த வீரனே! எமைஇரட்சிக்கச்
சித்திரச் சிறுபறை தூக்கி முழக்கி அருள்க!



## சிறு தேர்ப்பருவம் - 10

குழந்தையை சிறுதேருருட்டி விளையாடும் படி வேண்டுதல். (4ஆம் ஆண்டு)

(1) நறைபொழில் வண்டார்க்கும் வேலணைநற்
பதியுறைவான் கோயில் பக்தர்தம்
குறைதீர்க்கும் கணபதியே கற்பகமே யருள்வாய்
பொரியவல் மோதகமோடு பாலுந்தந்து
நறையுடை மலர்கள்தூவி வழிபடுவோம் ஐயா!
நற்குஞ்சரக் கன்றே! விநாயகக்களிறே
அறந்தரு சிந்தையாளர் அன்ப ரடியவர்தம்
தூய்மை கொள அறமற் றோரைப்
புறந்தள்ளும் புனிதனே! வேலணை வீதியெல்லாம்
வெண்மணல் பரப்பி விட்டேமாம் சித்திரச்
சிறுதேர் கொண்டுவந்து நிறுத்தி வைத்தோம்ஐய
செங்கை சிவப்பச் சித்திரத்தேருட்டி அருள்க!
குறுமுனி அகத்தியர் முதலாம் முனிவர் வாழ்த்த
எங்கள் முடிப்பிள்ளை சித்திரச்
சிறுதேர் உருட்டி அருள்க! விண்ணவரும் மண்ணவரும்
வாழ்த்தச் சிறுதேர் உருட்டியருள்க!



(2) வானங் கறுத்து இருண்டது வான்முகில்வந்து
வந்து குவிந்தது மழை பொழிய
வானவர் வந்து கூடினர் வாழ்த்துக்கள் கூறி
வண்ணமலர் தூவி நிற்கின்றார்
மானனையார் மைவிழியார் பண்ணோடி சைபாடி
ஆடிமெய்யுருகி நின்றார் மகிழ்ந்தனர்
தேனனையார் இசை கேட்டு பக்தரெல்லாம்
மெய்மறந்து வணங்கி நின்றார்
கானப் பறவைகளும் கறவைகளும் செயலிழந்து
களிப்புற்று மகிழ்ந்து வணங்கினவே
ஊனமில் உத்தம ராமந்தணர்கள் மறை ஓதிப்
பூசைகள் புரிந்து நிற்கின்றார்
தானவர் தவத்தின் மிக்கோர் பூதகணங்கள் பொலிந்து
நின்றாடி மகிழச் சைவநெறி தழைத்தோங்க
கூனற் பிறைக் கருள்செய்த சிவன்மகனே உலகமுய்ய
வண்ணச் சிறு தேர் உருட்டி அருள்க!



(3) வேலணைப் பதி வேழமுகத்தவன் வாழ்பெருங்
கோயில் வனப்புறச் செய்வோம்
சாலவும் நன்றாய்த் திசைதொறும் மாவிலைத்
தோரணம் நிறைகுடம் வைப்போம்
கோலஞ் செய்து உள்ளத் தன்புடன் பாளைக்
கமுகும்கதலியும் நட்டு பந்தரமைத்து
ஞால முய்யச் சீருடன் திருவிளக்குகள் ஏத்தி
ஐங்கரன் திருஉரு அமைத்து வணங்கிடுவோம்
ஆலமுண்டு அமரர்கட்கு அருள் புரிந்தான் மகனே
உன்னடியவர் கண்டு களித்துய்ய
ஏலவார் குழலாளுமை மங்கைமகிழத் துதிக்கை
தூக்கி ஞாலமுய்யச் சிறுதேருட்டி அருள்க!
வல்லை கணதிபநீ வாசமலர்கள் வகையாய்த்தூவி
வணங்குவோம் வண்ணச்சிறு தேருருட்டி யருள்க!
சீலமுடையாய் சிறப்புடையாய் சிந்தூரக் கணபதியே
ஞாலமுய்யச் சிறுதே ருருட்டி யருள்க! 3



(4) அகமகிழ்ந்து நெக்குருகி நினைப்பவரைக் காக்கும்
மந்திரமே! ஐங்கரனே ஓங்காரரூபனே
அகவிருளைப் போக்கி அறியாமை நீக்கியருமறையின்
பொருளுரைத்து வரமளித்து மகிழ்வோய்
அகத்தியற்கு அருள்புரிந்த விநாயகனே! திருநாகைக்
காரோண நம்பிவேண்டச் செவிமடுத்து
செகத்தினில் நல்லதோருயர் வாழ்வழித்து உலகம்
உய்யத் திருமுறைகள் தானளித்த
தவத்தோனே! தந்திமுகனே தரணி போற்றி
முதல் வணங்கும் தெய்வமே முக்கண்ணா
மகத்தான தமிழை அகமகிழ்ந்து அவ்வைக்கு
வரமாக அளித்த முதல்வாஇமையச்
சிகரத்தில் உமையோடிருந்து தேவபூத கணங்களோடாடி
மகிழ்வதை விட்டிறங்கி அல்லாதோர்
அகங்கார மடக்கி அன்பருக்கு இன்பசுகந்தந்தருள
வேலணைவீதியிலே வண்ணத் தேருருட்டியருள்க!



(5) அரசடி மருதமரத்தடி குளத்தடி ஆற்றோரமென்று
விரும்பியே இருக்கை கொள்வாய்
சிரசினில் சிரத்தையோடு குட்டியே கும்பிடுவார்
தோப்புக் கணரமும் முறையாகப் போட்டிடுவார்
சிரமம் என்றுஎண்ணமாட்டார் சிரந்தாழ்த்திவணங்கி
நாளும் பெருமதிப்புச் செய்வார்
கரங்களில் பாலும்பழமும் செவ்விளநீருங் கொண்டு
அபிடேகம் நாளும் செய்வார்
அரன்மகன் எங்கள் முதல்மகன் என்று சொல்வார்
முதற்பூசனையும் உனக்கே செய்வார்
வரம்பல வேண்டு வாரும் வணங்கியே மகிழ்வார்
தாமுங்கூடியே மகிழுங் கோயில்
வரம்பிலா இன்பம் நல்க வேலணைப் பதியில்தனிக்
கோயில் கொண்ட முடிப்பிள்ளையாரே!
ஏரம்பா எழிலார் குஞ்சரக் கன்றே கோயில் வீதியிலே
எம்வினை தீர்க்கச் சித்திரத் தேருருட்டியருள்க!



ஐந்து கரத்து ஆனை முகத்தான் வந்து உதித்தனன்
வேலணை மேற்கூர் முடிப்பிள்ளையாய்
அவர்புகழை பிள்ளைத் தமிழில் வார்க்க
நினைத்த தம்பி விருப்பை பாவால் வார்த்தார்
இணுவிற் பதிவாழ் வைகுந்தம் கணேசபிள்ளை
இப் பிள்ளைத் தமிழை நினைந்து நினைந்து
நெஞ்சு உருகிப்பாடும் அடியார் வினைகள்
களைந்திடுவாய் பிள்ளையே நின்பதம் போற்றி போற்றி

(அதிபர்) திருமதி வேணுகா சண்முகரெத்தினம்

*யா / மெமோரியல் ஆங்கிலபாடசாலை*

மானிப்பாய்

# நன்றியுரை

வேலணை மேற்கு முடிப்பிள்ளையாரை மனமுருகி வேண்டி நிற்பவர்களுக்கும், உள்ளத்தூய்மையோடு அவருக்குத் தொண்டு செய்பவர்களுக்கும், ஏதோ ஓர் வகையில் தனது அவர் அருட் கடாட்சத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருப்பதை அவரவர்களே உணர்ந்து இன்பமுற முடியும். அந்தவகையில் பிள்ளையாரைப் பிறப்பிலிருந்தே எங்கிருந்தாலும் தனது மனதில் இருத்தி வழிபட்டு அதனூடாகச் சாந்தி பெறும் ஒரு அன்பரின் மனதில் உதித்த எண்ணக் கருதான் இப்புத்தக வெளியீடு. அவர்தம் பரம்பரையில் தோன்றிய ஒரே ஒரு தகுதிதான் அடியேன் இப்புத்தகத்தை இங்கு வெளியிட்டு வைப்பதும் இந்நன்றி யுரையை எழுதுவதும் ஆகும். இதை ஒரு பாக்கியமாகவே யான் கருதுகின்றேன்.

இவ்வன்பர் தமது எண்ணக்கருவை தனது மருமகளான திருமதி சுகிர்தா ஞானச்சந்திரன் ஊடாக எமக்கு அறிவித்தார். தற்காலத்தில் சமயத்துறை, தமிழ்த்துறை சார்ந்த இது போன்ற புத்தகங்களை ஆக்கக்கூடியவர்கள் யாழ்ப்பாணத்தில் அருகி வருகிறார்கள். இப்புத்தகத்தை எழுதுவதற்கான அறிஞரைத் தேடும் முயற்சியில் நாம் சற்றுத் தளர்வடைந்திருந்தவேளையில் திருமதி வேணுகா சண்முகரெட்ணம் அவர்கள் எமக்குக் கைகொடுத்து, அவரின் பெருமுயற்சியால் பண்டிதை திருமதி வைகுந்தம் கணேச பிள்ளை அவர்கள் எமக்கு அறிமுகமானார். அவரும் மனமுவந்து இதை ஏற்று பக்தி சிரத்தையுடன் குறித்த காலப்பகுதிக்குள் இந்நூலை சிறப்புற ஆக்கித் தந்தார். முதற்கண் அவருக்கு எமது சிரம்தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவரை எமக்கு

அறிமுகம் செய்து, முற்றுமுழுதாகவே தானே முன்னின்று இப் புத்தகத்தைத் தயாரித்த திருமதி வேணுகா சண்முகரெட்ணம் அவர்களுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டவர்கள் ஆவோம். அத்துடன் அவர்தம் கணவர் திரு. சண்முகரெட்ணம் அவர்கள் அரும்பாடுபட்டு இப்புத்தகத்தை அச்சேற்றி எமது கைகளில் தவழ விட்டுள்ளார். அவருக்கும் எமது நன்றிகள். இவை எல்லாவற்றிற்கும் வழிகாட்டி நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகிக்கச் சம்மதித்து, சிறப்பாக இந்நிகழ்வை நடாத்த ஒப்புக்கொண்ட சைவப் புலவரும் இளைப்பாறிய அதிபருமான திரு. மு. திருஞானசம்பந்த பிள்ளை ஐயா அவர்களுக்கும் எமது நன்றிகள். இவ்விழாவை தமது ஆலயத்தில் நடாத்த அனுமதி தந்து தேவையான ஒழுங்குகளையும் செய்து தந்த ஆலய அறங்காவலற் சபையினருக்கும் எமது நன்றிகள். வெகுசிரமத்தின் மத்தியிலும் தமது வேலைப்பழுவிற்கிடையிலும் இங்கு வந்து பங்குபற்றி முதற்பிரதி, சிறப்புப் பிரதிகள் பெற்ற பெரியோர்களுக்கும் எமது நன்றிகள். அத்துடன் எமது அழைப்பை ஏற்று இவ்விழா நிகழ்வில் பங்குபற்றி எம்மை மகிழ்வித்த அனைவருக்கும் இம்மலரைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த கோண்டாவில் கஜன் அச்சகத்தினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

சுபம்

**பழனிநாதன் ஆரூரன்**





வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசைவிளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.



நூலாசிரியர்:
**பண்டிதை திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ இணுவில் இராமநாதன் கல்லூரி)



**இவரது ஏனைய ஆக்கங்கள்**

1) தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சி
2) பரராசசேகரர் ஆலய முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல்
3) இராமநாதேஸ்வரர் திருவூஞ்சல்
4) ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் குடமுழுக்குப் பாமாலை
5) வெளிவராத ஆக்கங்களுமுள

கஜன் பிறிண்டேர்ஸ் - கொண்டாவில்.